# வாழ்க்கையை மாற்றின நாள்

ஜூன் 8

வாரம் 10

பெலாரஸ்



வாடிம்

1



வாடிம்

- பெலாரஸில் வாடிமின் அம்மாவும் சகோதரியும் கார் விபத்து ஒன்றில் மரித்த சமயத்தில் அவருக்கு 14 வயது.
- அந்தப் பேரிழப்புக்கு பிறகு அப்பா தேவனைத் தேட ஆரம்பித்தார். செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சுவிசேஷக் கூட்டங்களில் கலந்து கொண்டு, ஞானஸ்நானம் பெற்றார்.
- அது 1990களில் நடந்தது; அது முன்னாள் சோவியத் யூனியனில் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கான பொற்காலமாக இருந்தது. 1991ம் ஆண்டு சோவியத் யூனியன் வீழ்ந்ததால், மதச்சுதந்தரத்திற்கான கதவு திறந்தது; பெலாரஸ், ரஷ்யா கூட்டங்கள் நடத்தப்பட்டன.



வாடிமின் அப்பா

- அப்போது வாடிமுக்கு 15 வயது. அப்பாவிடம், அவர் விரும்புகிற எதை வேண்டுமானாலும் செய்ய தயாராக இருப்பதாகவும், ஆனால் செவந்த்-டே அட்வெண்டிஸ்ட் சபைக்கு மட்டும் செல்ல விரும்பவில்லை என்றும் சொன்னான்.
- “உங்களுடைய சபைக்கு நான் வரமாட்டேன்” என்று சொன்னான். அப்பா ஒன்றுமே சொல்லவில்லை.
- நான்கு மாதங்கள் கழித்து, ஒரு ஓய்வுநாள் காலை வேளையில், அவனை தன்னுடன் ஆலயத்திற்கு வரும்படி அப்பா அழைத்தார். ஆனாலும் வாடிம் தன் மனதை மாற்றிக் கொள்ளவில்லை. “எனக்கு விருப்பமில்லை என்று சொன்னான்.

3




- ஆனால் அப்பா விடவில்லை. வாடிமுக்கு ஆலயத்திற்குச் செல்ல விருப்பமில்லாமல் இருந்தாலும், அவனுக்கு ஒரு ஆசை பிரதானமாக இருந்ததை அறிந்திருந்தார். கணினி நிரலாக்கப் பிரிவில் படித்துக் கொண்டிருந்தான்; அதனால் சொந்தமாக ஒரு கணினியை வாங்க வேண்டுமென விரும்பினான்.
- சொந்தமாக கணினி வைத்திருக்கிற ஒரு பெண்ணை செவந்த் -டே அட்வென்டிஸ்ட் சபையில் தனக்கு தெரியும் என்று அப்பா சொன்னார்.
- "அவர் எவ்வாறு வாங்கினாரென அவரிடம் கேட்கலாம்" என்று சொன்னார். வாடிம் ஆலயத்திற்குச் சென்றான்.



- ஆனால் சபை அங்கத்தினர்கள் ஒரு பாட்டியின் வீட்டில்தான் ஆராதனைக்காகக் கூடியிருந்தார்கள்; ஆராதனை செய்வதற்காக ஒரு பெரிய மேசையைச் சுற்றிலும் இருந்தார்கள்;
- அங்கு சென்றதும் வாடிம் தன் அப்பாவிடம், “அந்தப் பெண் எங்கு இருக்கிறார்? நான் அவரிடம் பேசவேண்டும்” என்று மெதுவான குரலில் கேட்டான்.
- “ஆராதனை முடிந்த பிறகு அவரிடம் பேசுவோம்” என்று அப்பா சொன்னார். ஆராதனை முழுவதும் இருக்கவேண்டும் என்பது வாடிமின் எண்ணமில்லை. அந்தப் பெண்ணைச் சந்தித்து விட்டு, உடனே வெளியேற நினைத்திருந்தான்.



- ஓய்வுநாள் பள்ளியிலும், பிறகு தெய்வீக ஆராதனையிலும் கலந்து கொண்டபோது, விசுவாசிகள் பாடல் பாடி ஆராதனை செய்ததை முதன் முறையாகப் பார்த்தான். பிரசங்கம் செய்வதர், தாவீதுக்கும் யோனத்தானுக்கும் இடையே இருந்த விசேஷித்த நட்புபற்றிப் பேசினார்; அதையும் அன்றுதான் முதன்முதலாகக் கேட்டான்.
- ஆராதனை முடிந்தபோது, தான் ஆலயத்திற்கு வந்த நோக்கத்தையே வாடிம் மறந்திருந்தான். கணினி வைத்திருந்த பெண்ணிடம் பேச விரும்பவில்லை. அங்கு அவன் பார்த்த, கேட்ட விஷயங்கள் அவனது இருதயத்தைத் தொட்டிருந்தன.



- அந்த ஓய்வுநாளுக்கு பிறகு, ஓய்வுநாளைக் கைக்கொள்ளத் தொடங்கினான். வேதாகமத்தையும், எலன் ஒய்ட் எழுதின போராட்ட வரிசை புத்தகங்களையும் வாசித்தான். ஒரு புதிய மனிதனாக மாறினான்.
- ஒரு ஆராதனை வேளை அவனது வாழ்க்கையை மாற்றியது. கணினி எவ்வாறு வாங்கவேண்டும் என்பதைக் கேட்பதற்காக ஆலயத்திற்கு வந்தான்; ஆனால் ஒரு புதிய மனிதனாகத் திரும்பிச் சென்றான்.
- ஒரு வருடம் கழித்து, தனது 16வது வயதில், தன் வாழ்க்கையை இயேசுவிடம் அர்ப்பணித்து, ஞானஸ்நானம் பெற்றான்.



அடுத்த வருடத்தில், போதகர் படிப்புக்காக ரஷ்யாவில் உள்ள சாவோவ்ஸ்கி அட்வென்டிஸ்ட் பல்கலைக்கழகத்திற்குச் சென்றான்.

இன்று, வாடிம் டெர்காச் ஒரு போதகராகவும், பெலாரஸின் செவந்த் - அட்வென்டிஸ்ட் சபையின் ஒரு தலைவராகவும் இருக்கிறார். சபை கான்ஃபரன்ஸுகளுக்கான பெலாரஸ் ஒன்றியத்தில் நிர்வாகச் செயலராகப் பணியாற்றுகிறார்